Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 50/2022**

**2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை ஓய்வு |
| பெயர் | - | முருகன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பொன்னையன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | மாணிக்கா | வயது | - | 63 |
| சாதி | - | | | | |

**<u>26.04.2024</u>**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் மாணிக்கா எஸ்டேட்டில் கூலி வேலை செய்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். இந்த வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 3.4.2021ம் அன்று இரவு 10.30 மணிக்கு கோகிலா அவருடைய வீட்டில் பிள்ளைகளுடன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது சுரேஷ்குமாரின் மனைவி உஷா அவரது மகன் தர்சன், சுரேஷ்குமாரின் அம்மா ராஜம்மாள் ஆகியோர் கோகிலா வீட்டிற்கு முன்பு வந்து உஷா கோகிலாவை பார்த்து ஆபாசமாக பேசி வெளியே வாடி என்று அசிங்கமாக சத்தம் போட்டார் . சத்தம் கேட்டு வெளியே வந்த கோகிலாவைப்பாத்து நிஷா நீ என் புருஷசனை வச்சிக்கிட்டு இருக்கிறீயா என்று அசிங்கமாக கேட்டு கையில் வைத்திருந்த கட்டையால் சரமாரியாக தாக்கினார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் விசாரிக்கவே இல்லை.

2. நிஷாவின் மகன் தர்ஷன் கோகிலாவைப்பார்த்து ஆபாசமாக பேசி என் அப்பன் உனக்கு கேட்குதா என்று கையில் வைத்திருந்த கல்லால் தலையில் ஓங்கி அடித்தான். நிஷாவின் மாமியார் ராஜம்மாள் கோகிலாவின் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் மாறி மாறி அடித்தார். மூன்று

பேரும் அடித்ததில் கோகிலாவிற்கு தலையில் பின்பக்கமும் வலது பக்கமும், ரத்தகாயமும், இரண்டு கால் தொடையிலும் இடது கை கட்டை விரலில் வீக்ககாயம் ஏற்பட்டுள்ளது என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

3. இதைப்பார்த்த அருகில் நின்றுகொண்டிருந்த கோகிலாவின் அக்கா மகள் அனுசியா என்பவருடன் நானும் எனது மனைவி செல்வி மகன் ஆகாஷ் ஆகியோர் சத்தம் போடவும் நிஷா கையில் வைத்திருந்த கட்டையை காட்டியும், தர்ஷன்கையில் வைத்திருந்த கல்லை காட்டியும் இனிமேல் எங்க வீட்டு ஆம்பிளைகிட்ட பேசுன உன்னை உயிரோடு விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மூன்று பேரும் கல்லையும் கட்டையையும் அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். பின்பு காயம்பட்ட கோகிலாவை அனுசியா மற்றும் அரவிந் தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் இல்லை என்றால் சரிதான். நான் 9.00 மணிக்கு தூக்கிவிட்டேனா என்றால் நான் 8.30 மணிக்கெல்லாம் துாங்கிவிடுவேன். கோகிலா தேயிலை தோட்டத்தில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் பொது இடம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது,

2. கோகிலாவின் கணவர் பெயர் செல்வராஜ் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள்கட்டை, கல், கெட்டவார்த்தை கொல்லாமல் விடமாட்டேன் என்று யாரேனும் சொன்னார்களா என்றால் எனக்கு தெரியாது.

3. நான் அந்த ஏறியாவில் இருப்பதால் போலீசார்கள் கேட்டுக்கொண்டதிற்காக எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தெரியாது. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 50/2022

**2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | எஸ்டேட் வேலை |
| பெயர் | - | செல்வி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | முருகன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | மாணிக்கா என்சி | வயது | - | 49 |
| சாதி | - | | | | |

**26.04.2024**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**:

1. நான் மாணிக்காஎன்சி எஸ்டேட்டில் எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் எஸ்டேட்டில் உள்ளவர்கள். . போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரித்தபோதும் தெரியாது என்றுதான் சொன்னேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 3.4.2021ம் அன்று இரவு 10.30 மணிக்கு கோகிலா அவருடைய வீட்டில் பிள்ளைகளுடன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது சுரேஷ்குமாரின் மனைவி உஷா அவரது மகன் தர்சன், சுரேஷ்குமாரின் அம்மா ராஜம்மாள் ஆகியோர் கோகிலா வீட்டிற்கு முன்பு வந்து உஷா கோகிலாவை பார்த்து ஆபாசமாக பேசி வெளியே வாடி என்று அசிங்கமாக சத்தம் போட்டார் . சத்தம் கேட்டு வெளியே வந்த கோகிலாவைப்பாத்து நிஷா நீ என் புருஷசனை வச்சிக்கிட்டு இருக்கிறீயா என்று அசிங்கமாக கேட்டு கையில் வைத்திருந்த கட்டையால் சரமாரியாக தாக்கினார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நிஷாவின் மகன் தர்ஷன் கோகிலாவைப்பார்த்து ஆபாசமாக பேசி என் அப்பன் உனக்கு கேட்குதா என்று கையில் வைத்திருந்த கல்லால் தலையில் ஓங்கி அடித்தான். நிஷாவின் மாமியார் ராஜம்மாள் கோகிலாவின் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் மாறி மாறி அடித்தார். மூன்று

பேரும் அடித்ததில் கோகிலாவிற்கு தலையில் பின்பக்கமும் வலது பக்கமும், ரத்தகாயமும், இரண்டு கால் தொடையிலும் இடது கை கட்டை விரலில் வீக்ககாயம் ஏற்பட்டுள்ளது என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை,

3. இதைப்பார்த்த அருகில் நின்றுகொண்டிருந்த கோகிலாவின் அக்கா மகள் அனுசியா என்பவருடன் நானும் எனது மனைவி செல்வி மகன் ஆகாஷ் ஆகியோர் சத்தம் போடவும் நிஷா கையில் வைத்திருந்த கட்டையை காட்டியும், தர்ஷன்கையில் வைத்திருந்த கல்லை காட்டியும் இனிமேல் எங்க வீட்டு ஆம்பிளைகிட்ட பேசுன உன்னை உயிரோடு விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மூன்று பேரும் கல்லையும் கட்டையையும் அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். பின்பு காயம்பட்ட கோகிலாவை அனுசியா மற்றும் அரவிந் தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் இல்லை என்றால் சரிதான். நான் 9.00 மணிக்கு தூக்கிவிட்டேனா என்றால் நான் தூங்கிகொண்டுதான் இருந்தேன். . கோகிலா தேயிலை தோட்டத்தில் வேலை செய்கிறார் என்றால் பேக்டரியில். சம்பவம் நடந்த இடம் பொது இடம் இல்லை என்றால் சரிதான்.

2. கோகிலாவின் கணவர் பெயர் செல்வராஜ் என்றால் பேர் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரிகள் கட்டை, கல், கெட்டவார்த்தை கொல்லாமல் விடமாட்டேன் என்று யாரேனும் சொன்னார்களா என்றால் எனக்கு தெரியவில்லை.

3. நான் அந்த ஏறியாவில் இருப்பதால் போலீசார்கள் கேட்டுக்கொண்டதிற்காக எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தெரியவில்லை என்றுதான் சொன்னேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் எங்களுக்கு எதுவும் தெரியவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 50/2022

**2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | BSC. 3-ம் ஆண்டு |
| பெயர் | - | ஆகாஷ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முருகன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 23 |
| சாதி | - | | | | |

**26.04.2024**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**:

1. நான் பொள்ளாச்சி NGM கல்லூரியில் B.Sc இறுதி ஆண்டு படித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன நடந்தது என்று ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 3.4.2021ம் அன்று இரவு 10.30 மணிக்கு கோகிலா அவருடைய வீட்டில் பிள்ளைகளுடன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது சுரேஷ்குமாரின் மனைவி உஷா அவரது மகன் தர்சன், சுரேஷ்குமாரின் அம்மா ராஜம்மாள் ஆகியோர் கோகிலா வீட்டிற்கு முன்பு வந்து உஷா கோகிலாவை பார்த்து ஆபாசமாக பேசி வெளியே வாடி என்று அசிங்கமாக சத்தம் போட்டார் . சத்தம் கேட்டு வெளியே வந்த கோகிலாவைப்பாத்து நிஷா நீ என் புருஷசனை வச்சிக்கிட்டு இருக்கிறீயா என்று அசிங்கமாக கேட்டு கையில் வைத்திருந்த கட்டையால் சரமாரியாக தாக்கினார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நிஷாவின் மகன் தர்ஷன் கோகிலாவைப்பார்த்து ஆபாசமாக பேசி என் அப்பன் உனக்கு கேட்குதா என்று கையில் வைத்திருந்த கல்லால் தலையில் ஓங்கி அடித்தான். நிஷாவின் மாமியார் ராஜம்மாள் கோகிலாவின் தலைமுடியை பிடித்து இழுத்து கையால் மாறி மாறி அடித்தார். மூன்று

பேரும் அடித்ததில் கோகிலாவிற்கு தலையில் பின்பக்கமும் வலது பக்கமும், ரத்தகாயமும், இரண்டு கால் தொடையிலும் இடது கை கட்டை விரலில் வீக்ககாயம் ஏற்பட்டுள்ளது என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை,

3. இதைப்பார்த்த அருகில் நின்றுகொண்டிருந்த கோகிலாவின் அக்கா மகள் அனுசியா என்பவருடன் நானும் எனது மனைவி செல்வி மகன் ஆகாஷ் ஆகியோர் சத்தம் போடவும் நிஷா கையில் வைத்திருந்த கட்டையை காட்டியும், தர்ஷன்கையில் வைத்திருந்த கல்லை காட்டியும் இனிமேல் எங்க வீட்டு ஆம்பிளைகிட்ட பேசுன உன்னை உயிரோடு விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்து மூன்று பேரும் கல்லையும் கட்டையையும் அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். பின்பு காயம்பட்ட கோகிலாவை அனுசியா மற்றும் அரவிந் தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் மூலம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் இல்லை என்றால் சரிதான். நான் 9.00 மணிக்கு தூக்கிவிட்டேனா என்றால் சரிதான். கோகிலா தேயிலை தோட்டத்தில் வேலை செய்கிறார் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடம் பொது இடம் இல்லை என்றால் சரிதான்.

2. கோகிலாவின் கணவர் பெயர் செல்வராஜ் என்றால் பேர் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரிகள் கட்டை, கல், கெட்டவார்த்தை கொல்லாமல் விடமாட்டேன் என்று யாரேனும் சொன்னார்களா என்றால் சரிதான்.

3. நான் அந்த ஏறியாவில் இருப்பதால் போலீசார்கள் கேட்டுக்கொண்டதிற்காக எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் பொய்சாட்சியம் சொல்லவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை.

நீதிமன்ற கேள்வி:

1. 3.4.2021 -ல் என்ன செய்துகொண்டிருந்தேன் என்றால் லாக்டவுன் சமயம் வீட்டில் இருந்தேன். வீட்டில் என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் என்னுடன் அப்பா, அம்மா. வழக்கமாக வீட்டில் இருக்கும் போது எத்தனை மணிக்கு தூங்குவேன் என்றால் 9.30 -10.00.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 50/2022

**2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | எஸ்டேட் வேலை |
| பெயர் | - | அறிவழகன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | துரைசாமி | சமயம் | - | கிருத்துவர் |
| கிராமம் | - | ஸ்டேன்மோர் | வயது | - | 51 |
| சாதி | - | | | | |

**26.04.2024**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**:

1. நான் ஸ்டேன்மோரில் வசித்து எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் அவருடைய மகன் அடிச்சுப்போட்டார்கள் எனது மகள் அனுசியா எனக்கு அன்று இரவு போன் செய்தார். எனது மகள் ஒரு 2 வருடங்களுக்கு முன்பு போன் செய்தார். கொழுந்தியா வீடு உள்ள மாணிக்கா என்சியில் போய் பார்த்தேன்.

2. பார்த்தபோது என் கொழுந்தியா கோகிலாவை 108 ஆம்புலன்சில் உட்கார வைத்திருந்தார்கள். தலையிலும், தாடையிலும் ரத்தகாயமாக இருந்தது. வால்பாறை GH-க்குகொண்டுபோனோம். போலீசார் ஆஸ்பத்திரிக்கு வந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 4.4.2021ம் அன்று மதியம் 12.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண் 57/2021 தொடர்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் நானும் ஞானசேகரும் சாட்சியாக இருந்து நான் முதலாவதாகவும், ஞானசேகர் 2-வதாகவும் கையொப்பம் போட்டுக்கொடுத்தோம் என்றால்

அதை நான் பார்க்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வீட்டுக்கு முன்னால் என்ன இருக்கிறது என்றால் பூஞ்செடி உள்ளது வெண்ணக்காய் மரம் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் டிஸ்பென்சிக்குரோடு வருகிறதா பேக்டரிக்கு ரோடு வருகிறாதாஎன்றால் பேக்டரியில் இருந்து டிஸ்பென்சிக்கு ரோடு வருகிறது. டிஸ்பென்சியில் இருந்து தனியாக கல் ரோடு வருகிறது.

2. எதிரி தரப்பில் சாட்சியிடம் வரைபடத்தை காண்பித்து வீட்டு பக்கத்தில் இருந்து ரோடு வருகிறதா என்றால் வீட்டை ஒட்டிதான் கல் ரோடு வருகிறது. வாதியின் வீட்டின் இருபுறமும் இருக்கும் வீட்டுக்காரர்கள் பெயர் என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. சம்பவ நடந்ததாக சொல்லப்ப்டும் இடத்திற்கு கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் பங்களா உள்ளது. வீட்டிற்கும் ரோட்டிற்கும் கீழே என்ன உள்ளது என்றால் லயன் உள்ளது. பார்வை மகஜரில் 80 செ,மீ நீளமுள்ள 15.5 விட்டமுள்ள மரக்கட்டையும், 1 கிலோ கல்லும் இருந்ததா என்றால் இருட்டில் கிடந்தது. அதை நைட்டில் பார்த்தால் தெளிவாக தெரியவில்லை.

4. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் அவர்கள் தான் அடிச்சார்கள். அடித்ததை நான் பார்த்தேனாஎன்றால் மகள் தான் அங்கு இருந்தது. நான் பார்க்கவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.